# மாணவர் கண்டுபிடிப்புகள் ஊக்குவிப்பு அமைப்பு துவக்க விழா



கும்மிடிப்பூண்டி,ஏப்.26

கும்மிடிப்பூண்டி அடுத்த பெருவாயல் டி.ஜெ.எஸ் பொறியியல் கல்லூரியில் மாணவர்களின் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் ஐ டூ ஐ எனப்படும் கற்பனையை செயலாக்கம் செய்தல் அமைப்பு துவக்கப்பட்டது.

**அனைத்து துறை**

ஆந்திராவை தலைமை இடமாக கொண்டு செயல்படும் இமேஜின் டூ இன்னவேட்டிவ் என்கிற அமைப்பின் சார்பில் டி.ஜெ.எஸ் பொறியியல் கல்லூரியில் அனைத்து துறை மாணவர்களை உள்ளடக்கிய புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் அமைப்பு துவக்கப்பட்டது.

**கண்காட்சி**

விழாவிற்கு டி.ஜெ.எஸ் கல்வி குழும தலைவர் டி. ஜெ.கோவிந்தராஜன் தலைமை தாங்கினார்,. இயக்குனர் கபிலன் முன்னிலை வகித்தார், விழாவில் கல்லூரி முதல்வர் பழனி வரவேற்றார்.

நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக ஐ டூ ஐ நிறுவன தலைமை செயல் அலுவலர் பில்லா சுமாஷ், திருச்சி பெல் நிறுவன துணை மேலாளர் எம்.ராஜசேகர் கலந்துக் கொண்டு அமைப்பை துவக்கி வைத்தனர்.

தொடர்ந்து கல்லூரியில் மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகளான இ-பைக், சோலார் கார், எலக்ட்ரிக் கார் மற்றும் பல்வேறு கண்டுபிடிப்பு மாதிரிகள் அடங்கிய கண்காட்சியை பார்வையிட்டனர்.இந்த அமைப்பானது தமிழகத்தில் முதலாவது டி.ஜெ.எஸ் பொறியியல் கல்லூரியில் துவக்கப்பட்ட நிலையில், இந்த அமைப்பின் நோக்கமானது மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகள் குறித்த யோசனைக்கு செயல் வடிவம் தந்து, அந்த கண்டுபிடிப்பை உருவாக்கி, அதற்கு காப்புரிமை வாங்கி சந்தைப்படுத்த உதவுவது என்றும், இதன் மூலம் மாணவர்களின் சிந்தனை வளம் பெருகி, புதிய புதிய கண்டிபிடிப்புகளை கண்டறிய ஊக்கப்படுத்தவும், வழிகாட்டவும் முடியும் என நிகழ்வின் போது ஐ டூ ஐ அமைப்பின் டி.ஜெ.எஸ் பொறியியல் கல்லூரியின் தொடர்பு அலுவலர் லோகேஷ்வரன் தெரிவித்தார்.

விழா முடிவில் டி.ஜெ. எஸ் பொறியியல் கல்லூரியின் இயந்திர பொறியியல் துறை தலைவர் ஜெயவீரன் நன்றி கூறினார். விழாவில் அனைத்து துறை தலைவர்களான ஜனார்த்தனன், ஜெய அனுசுயா, சண்முக சங்கரி, சிவ சந்திரன், லஷ்மி காந்தன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only